<u>முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.</u>

OS.No.141/2014 பெயர் : சத்யவாணி நாள் : 02.04.2026

வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.1: 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

எனது கணவர் பெயர் நாகராஜ பண்ணாடி. அவருக்கு பூர்வீகம் பாலகாட்டுரை சேர்ந்த கொட்டுக்காரன்புதூர். எனது பூர்வீகம் வீரபண்ணாடியூர். எனக்கும், எனது கணவருக்கும் 1973-ம் வருடம் திருமணம் நடைபெற்றது. நானும், எனது கணவரும் திருமணத்திற்கு முன்னரே உறவினர்கள் ஆவோம். எனது மாமனாரின் பெயர் அர்த்தனாரி பண்ணாடி. அவருக்கு பழனி பண்ணாடி என்ற சகோதரர் இருந்தார் என்றால், சரிதான். தாவா சொத்து ஆதியில் என் மாமனாரின் சொத்துக்கள் ஆகும். அந்த சொத்துக்கள் என் மாமனாரின் சுய சம்பாத்திய சொத்துக்களா என்றால், அந்த காலத்தில் சேர்த்துக் கொண்ட சொத்துக்கள் ஆகும். என் மாமனார் பெயரில் கிரைய பத்திரங்களோ வேறு ஆவணங்களோ இல்லை என்றால், சரிதான். தாவா சொத்துக்களின் சர்வே எண் தெரியுமா என்றால், எனக்கு ஞாபகம் இல்லை. என் மாமனாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களின் விஸ்தீரணம் தெரியுமா என்றால், முதலில் 6 ஏக்கர் 35 செண்ட் இருந்தது, அதில் 3 ஏக்கர் என் மாமனார் விற்று விட்டார். எந்த தேதியில், எந்த பத்திரத்தின் அடிப்படையில் அந்த சொத்தை விற்றார் என்று எனக்கு தெரியாது. எனது மாமனார் அர்த்தனாரி பண்ணாடிக்கு பாதி சொத்தும், அவரது தம்பி பழனி பண்ணாடிக்கு பாதி சொத்தும் பாத்தியம். பழனி பண்ணாடிக்கு முத்துசாமி பண்ணாடி, பாண்டி பண்ணாடி ஆகிய மகன்கள் உள்ளனர். முத்துசாமி பண்ணாடிக்கு ஒரு மகன் இருந்தார், அவர் இறந்து விட்டார். பாண்டி

பண்ணாடிக்கு இரண்டு பெண்மக்கள் உள்ளனர். 1966-ல் முத்துசாமி பண்ணாடி அவரது பங்கு சொத்தைப் பொறுத்து 84-1/2 சென்ட் விஸ்தீரணத்தை பாண்டி பண்ணாடி மற்றும் நாகராஜ பண்ணாடி ஆகியோருக்கு விற்று விட்டார். மேற்படி சங்கதிகள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால், சரிதான். மேற்படி 1966 கிரையப் பத்திரம் செக்குபந்தி குறிப்பிட்டு எழுதப்பட்டதா, பொதுவில் குறிப்பிட்டு எழுதப்பட்டதா என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால், சரிதான்.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**